# 2 இறை சமூகத்தில் நேர்மையாளர் ‘‘தாவீது’’

1 சாமுவேல் 24 :1-22          2 சாமுவேல் 9 :1-13

**அன்பு**

திருவிவிலியத்தில் சங்கிலிக் கோர்வை போன்று தொடர்ந்து காணப்படும் தலைப்பு ‘அன்பு’ ஆகும். இறையன்பை மனிதன் அனுபவித்த விதம் பற்றி பழைய, புதிய ஏற்பாடுகளைக் கற்கும்போது நாம் அறிந்துகொள்ளலாம்.

இந்தப் பாடத்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படும் வரலாற்றுக் கதையில் இறைவன் எதிர்நோக்கும் வண்ணம் பகைவரிடம் அன்பு செலுத்தி, முன்மாதிரியாக வாழ்ந்த ஒப்பற்ற ஒருவரைப் பற்றிக் கற்போம்.

**வாசிப்போம்**

**தாவீது சவுலைக் கொல்லாது விடல்**

**1 சாமுவேல் 24 :1-22**

**தாவீதும் மெபிபொசேத்தும்**

**2 சாமுவேல் 9 :1-13**

நீங்கள் வாசித்த மேற்படி இரு திருவிவிலியப் பகுதிகளில் காணப்படும் முக்கிய நிகழ்வுகளின் சாராம்சம்:

### தாவீது ஏன்கேதி பாலைவனத்தில் சவுலைக் கொலை செய்வதைத் தவிர்த்தல்

- இஸ்ரயேல் மக்களின் முதல் அரசன் சவுல் பல்வேறு காரணங்களை முன்வைத்து தாவீதின் மீது பொறாமைப்பட்டான். அதனால் சவுல் அரசன் தாவீதைக் கொலை செய்வதற்கு முயற்சித்தான். இதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள தாவீது பாலை நிலத்தில் மறைந்திருந்தான்.

- தாவீது ஏன்கேதிப் பாலைநிலத்தில் இருப்பதை அறிந்த சவுலும் அவரது ஆட்களும் தாவீதை அழிக்க வழிதேடினர்.

- ஏன்கேதிக் குகையில் சவுல் அரசரைக் கண்ட தாவீதுக்கு அவனைக் கொலை செய்வதற்கு ஏற்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

- ஆனால் தாவீது சவுலைக் கொலைசெய்யாது, சவுலின் மேலங்கியின் முனையை அவருக்குத் தெரியாமல் வெட்டினான். அதற்காக தாவீது மனம் வருந்தினார்.

- தாவீது தம் ஆட்களைப் பார்த்து, ''ஆண்டவர் திருப்பொழிவு செய்த என் தலைவருக்கு எத் தீங்கும் செய்யாதவாறு நான் அவர் மேல் கைவைக்கக் கூடாது'' என அவர்களைத் தடுத்தார்.

- சவுல் குகையை விட்டு வெளியேறியபோது, தாவீது சவுலைப் பின்தொடர்ந்து ''அரசே என் தலைவரே'' என்று அழைத்தார். பின் தாவீது தரையில் முகம் குப்புற விழுந்து அவரை வணங்கினார்.

- ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்ட என் தலைவருக்கு எதிராக நான் கை உயர்த்தக் கூடாது'' என தாழ்மையுடன் தாவீது கூறினார். உமக்கெதிராக நான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று தாவீது சவுலிடம் கூறினார்.

- தாவீது பேசி முடிந்தவுடன் சவுல் ''என் மகன் தாவீதே! இது உன் குரல் தானா!'' என்று சொல்லி உரத்த குரலில் அழுதார்.

- அவர் தாவீதிடம் ''நீ என்னிலும் நீதிமான்'' எனக் கூறி அவனது நேர்மைத் தன்மையை ஏற்றுக்கொண்டார். ''நானா உனக்குத் தீங்கு செய்தேன். நீ எனக்கு நன்மையே செய்திருக்கின்றாய்'' என்று கூறி இறைவனின் இரக்கமான ஆசிகளைத் தாவீதுக்கு வழங்கினார்.

## தாவீதும் மெபிபோசேத்தும்

- பின் ஒருகாலத்தில் சவுல் அரசனும் அவனது மகன் யோனத்தானும் போரில் தோல்வி அடைந்து மரணம் அடைந்தனர்.

- சவுலுக்குப் பின்னர் இஸ்ரயேலின் அரசனாக தாவீது நியமிக்கப்பட்டார்.

- போரில் தோல்வி அடைந்த அரச பரம்பரையை அழித்தல் அக்காலத்து வழக்கமாக இருப்பினும் தாவீது சவுலின் சந்ததியினரான தனது நண்பன் யோனத்தானின் மகன் மெபிபோசேத்தின் மீது கருணை காட்டினான்.

- மேலும் சவுலின் நிலத்தின் உரிமையை மாத்திரமன்றி, தன்னுடன் அமர்ந்து உணவருந்துவதற்கும் மெபிபொசேத்துக்கு இடமளித்தான்.

- அரச வழிமரபிற்கு உரிமையாளர் மட்டும் ஒன்றாக உணவருந்துதல் அன்றைய

வழக்கமாக இருந்தாலும், யோனத்தானின் மகன் மெபிபொசேத்துவை உண வருந்த அழைத்தமையின் மூலமாக அவனை தனது மகனாகக் கருதினார் என உணர்த்தப்படுகின்றது.

♦ மெபிபொசேத்துக்கு உடல் குறைபாடு காணப்படினும் அவனது வாழ்வுக்கு மதிப்பளித்து அவனை அன்புடன் பராமரித்து தாவீது பிறருக்கு முன்மாதிரியாகினார்.

தாவீதின் நேர்மை வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் :

- ஏன்கேதியில் சவுலைக் கொலைசெய்வதைத் தவிர்த்தல்
- மெபிபொசேத்துக்கு கருணை காட்டல்

தாவீதின் வாழ்வில் வெளிப்பட்ட நற்பண்புகள் பின்வருமாறு

**தாவீது**

- **சவுல் இறைவனால் திருப்பொழிவு பெற்றவர் என ஏற்று அவர் மீது கருணை காட்டினார்.**
- **இறைபயத்துடன் செயற்பட்டார்.**
- **கீழ்ப்படிவுடன் செயற்பட்டார்.**
- **பழிவாங்காமல் அன்புடன் செயற்பட்டார்.**
- **சரியானவைகளில் மனதைச் செலுத்தினார்.**
- **நேர்மையாளராக வாழ்ந்தார்.**
- **கருணை நிறைந்து காணப்பட்டார்.**
- **மன்னிப்பு வழங்கினார்.**
- **பிறரின் உடைமைகளைப் பறிக்காது வாழ்ந்தார்.**
- **பிறரது வாழ்வைப் பாதுகாத்தார்.**
- **தமது அதிகாரத்தை தமது மனம் ஆட்கொள்ளாது இறைவனுக்கு உரித்தானவராகச் செயற்பட்டான்.**

இவ்வாறாக தாவீது நேர்மையுடன் செயற்பட்டது போன்று கிறிஸ்தவர்களாகிய நாமும் நேர்மையுடன் செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நாம் பிறரின் வாழ்வைப் பாதுகாக்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது எம்முடன் இணைந்து செயற்படுபவர்களைப் போன்று எமக்கு எதிராகச் செயற்படுபவர்கள் மீதும் சமமாகக் கருணை காட்டும் மனம் அவசியம். அதேபோன்று தம்மைப் பாதுகாப்பது போல மாற்றுத் திறனாளிகளின் சுக நலத்தையும் பாதுகாப்பதில் ஈடுபடல் வேண்டும். நல்லவைகளைச் செய்து நேர்மை நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப ஒன்றிணைந்து செயற்படுவோம்.

### செயற்பாடு

1. தாவீதின் நற்பண்புகள் வெளிப்பட்ட நிகழ்வுகளை எழுதுக.
2. கிறிஸ்தவ பிள்ளையாக நீர் உங்களுடன் இருப்பவர்களிடம் அன்புடன் செயற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் மூன்றை விளக்குக.